# DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No.18/2024
Deposition of Witness for L.W.6 / P.W.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சரவணன் | | | |
| Father's Name | : | ராமலிங்கம் | Occupation | : | பணி ஓய்வு |
| Village | : | பவானி | | | |
| District | : | ஈரோடு | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.02.2026**
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.
**எதிரி ஆஜரில் உள்ளார்.**
**முதல் விசாரணை:**

நான் தமிழ்நாடு காவல்துறையில் தலைமை காவலராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று தற்போது பவானியில் வசித்து வருகிறேன். நான் கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது கடந்த 19.06.2023-ம் தேதி அன்று, காலை சுமார் 10.45 மணியளவில், நான் காவல் நிலையத்தில் வரவேற்பாளராக பணியில் இருந்த பொழுது B.P.அக்ரஹாரம், காமராஜ் நகரைச் சார்ந்த குப்புசாமி என்பவர் அது மனைவி கோவிந்தம்மாள் மற்றும் அவரது மகள் ஆஜர் எதிரி சுதா தேவி ஆகியோர் வந்திருந்தார்கள். அப்போது என்னுடன் மனோஜ் குமார் என்ற காவலரும் வரவேற்பாளர் பணியில் இருந்தார். எங்களுடன் தலைமை காவலர் ரமேஷ் என்பவரும் பணியில் இருந்தார். அப்போது எங்களுடன் பெண் காவலர் நிரஞ்சனா என்பவரும் பணியில் இருந்தார். மேற்படி கோவிந்தம்மாளும், சுதா தேவியும் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சூரியம்பாளையத்தைச் சேர்ந்த கஸ்தூரி மீது பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பான புகாரை கொடுத்திருந்தார்கள். அந்த புகார் மனுவை விசாரிப்பதற்காக கோவிந்தம்மாளும், சுதா தேவியும், அங்கு வந்திருந்தார்கள். அவர்களுக்கு பின்னாலேயே கஸ்தூரியும் வந்து விட்டார். நாங்கள் விசாரணையை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே சுதா தேவியும் கோவிந்தம்மாளும், கஸ்தூரியுடன் வாய்

தகராறில் ஈடுபட்டார்கள். அப்போது திடீரென்று சுதா தேவி கஸ்தூரியை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டி, தனது வலது காலில் அணிந்திருந்த செருப்பை கழட்டி கஸ்தூரியின் இடது கன்னத்தில் செருப்பால் மாறி மாறி அடித்தார். அங்கு நின்றிருந்த பெண் காவலர் நிரஞ்சனா ஓடி சென்று தடுத்தபொழுது சுதா தேவி நிரஞ்சனாவையும் ஆபாச வார்த்தைகளால் திட்டி, அதே செருப்பால் நிரஞ்சனாவையும் மாறி மாறி அடித்தார் பின்னர், நான், மனோஜ் குமார் மற்றும் தலைமை காவலர் ரமேஷ் ஆகியோர் ஓடிச் சென்று தடுத்தோம். அப்போது எதிரி சுதா தேவி கஸ்தூரியை தகாத வார்த்தைகளால் திட்டி என்னைக்கு இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று அவருக்கு கொலை மிரட்டல் விடுத்தும், பெண் காவலர் நிரஞ்சனாவையும் தகாத வார்த்தைகளால் திட்டிவிட்டு தன் செருப்பை போட்டுவிட்டு கோவிந்தம்மாளும், சுதாதேவியும், அங்கிருந்து திட்டிக்கொண்டே சென்று விட்டார்கள் பெண் காவலர் நிரஞ்சனா மேற்படி சம்பவம் தொடர்பாக புகார் அளித்தார். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No.18/2024
Deposition of Witness for L.W.6 / P.W.3

| Name | : | மனோஜ்குமார் | | | |
|---|---|---|---|---|---|
| Father's Name | : | பிரகாசம் | Occupation | : | Data Enry operator |
| Village | : | கருங்கல்பாளையம் | | | |
| District | : | ஈரோடு | Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.02.2026**
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.
**எதிரி ஆஜரில் உள்ளார்.**
**முதல் விசாரணை:**

நான் தற்போது கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் டேட்டா என்ட்ரி ஆபரேட்டராக பணிபுரிந்து வருகிறேன் கடந்த 19.06.2023-ம் தேதி அன்று, காலை சுமார் 10.45 மணியளவில், நான் காவல் நிலையத்தில் வரவேற்பாளராக பணியில் இருந்த பொழுது B.P.அக்ரஹாரம், காமராஜ் நகரைச் சார்ந்த குப்புசாமி என்பவர் அது மனைவி கோவிந்தம்மாள் மற்றும் அவரது மகள் ஆஜர் எதிரி சுதா தேவி ஆகியோர் வந்திருந்தார்கள். அப்போது என்னுடன் தலைமைக்காவலர் சரவணன் என்ற காவலரும் வரவேற்பாளர் பணியில் இருந்தார். எங்களுடன் தலைமை காவலர் ரமேஷ் என்பவரும் பணியில் இருந்தார். அப்போது எங்களுடன் பெண் காவலர் நிரஞ்சனா என்பவரும் பணியில் இருந்தார். மேற்படி கோவிந்தம்மாளும், சுதா தேவியும் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சூரியம்பாளையத்தைச் சேர்ந்த கஸ்தூரி மீது பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பான புகாரை கொடுத்திருந்தார்கள். அந்த புகார் மனுவை விசாரிப்பதற்காக கோவிந்தம்மாளும், சுதா தேவியும், அங்கு வந்திருந்தார்கள். அவர்களுக்கு பின்னாலேயே கஸ்தூரியும் வந்து விட்டார். விசாரணையை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே சுதா தேவியும் கோவிந்தம்மாளும், கஸ்தூரியுடன் வாய் தகராறில் ஈடுபட்டார்கள். அப்போது திடீரென்று சுதா தேவி கஸ்தூரியை பார்த்து தகாத

வார்த்தைகளால் திட்டி, தனது வலது காலில் அணிந்திருந்த செருப்பை கழட்டி கஸ்தூரியின் இடது கன்னத்தில் செருப்பால் மாறி மாறி அடித்தார். அங்கு நின்றிருந்த பெண் காவலர் நிரஞ்சனா ஓடி சென்று தடுத்தபொழுது சுதா தேவி நிரஞ்சனாவையும் ஆபாச வார்த்தைகளால் திட்டி, அதே செருப்பால் நிரஞ்சனாவையும் மாறி மாறி அடித்தார் பின்னர், நான், தலைமைக்காவலர் சரணவன் மற்றும் தலைமை காவலர் ரமேஷ் ஆகியோர் ஓடிச் சென்று தடுத்தோம். அப்போது எதிரி சுதா தேவி கஸ்தூரியை தகாத வார்த்தைகளால் திட்டி என்னைக்கு இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று அவருக்கு கொலை மிரட்டல் விடுத்தும், பெண் காவலர் நிரஞ்சனாவையும் தகாத வார்த்தைகளால் திட்டிவிட்டு தன் செருப்பை போட்டுவிட்டு கோவிந்தம்மாளும், சுதாதேவியும், அங்கிருந்து திட்டிக்கொண்டே சென்று விட்டார்கள் பெண் காவலர் நிரஞ்சனா மேற்படி சம்பவம் தொடர்பாக புகார் அளித்தார். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.